**தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 11 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2002:03:00 வருமானக் குறியீடு மற்றும் 2002:04:00 வருமானக் குறியீட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப மதிப்பீடு மற்றும்ட 2021 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீடு ஆகியவற்றுக்கிடையே முறையே ரூபா 21,603 மில்லியன் மற்றும் ரூபா 831 மில்லியனான வேறுபாடுகள் நிலவின. | அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் 03 பந்தியின் பிரகாரம் எமது திணைக்களத்திற்கு உள்ளபடியான அடையக் கூடிய 2021 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமான செயல்முன்னேற்றங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. | அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2015 யூன் 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் 142 இன் பிரகாரம் வருமான எதிர்வு கூறல் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிராமையால் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | | |

**(I) வருமானக் குறியீடு 20:02:03:00 இலாபம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 20:02:03:00 - இலாபம் வருமானக் குறியீட்டிற்காக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 49,000 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 53 சதவீதம் அல்லது ரூபா 25,919 மில்லியன் வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிலவியகொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பல நிறுவனங்கள் குறைந்த இலாபத் தன்மையை அறிக்கையிட்டிருந்ததுடன் இலாபத்தினை பெற்றுக் கொள்ளும் போது செயற்படு மூலதனத் தேவைப்பாடுகள் அதிகளவில் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமான துமான வருமானக் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டில் 05 பொது முயற்சிகள் ஊடாக ரூபா 1,800 மில்லியன் வருமானம் ஈட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த முயற்சிகளிலிருந்து எதுவித வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்க வில்லை. | **இலங்கை முதலீட்டுச் சபை** 2021 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான மூலதன தேவைப்பாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டு இலாப அனுப்பல் இடம்பெற்றிருக்கவில்லை.<br><br>**அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்** கூட்டுத்தாபனத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 200 மில்லியன் ஆகும். உள்ளபடியான வருமானம் ரூபா 0.00 மில்லியன் ஆகும். அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு பொதுத்திறைசேரியினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்த மானதுமான வருமானக் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | **இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்** கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சுற்றுலா பயணிகளின் வருகை மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லுதலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஈட்டுவதற்கு எதிர்பார்த்த மதிப்பிடப்பட்ட இலாபத்தினை ஈட்ட முடியாதிருந்தது. | |
| (iii) | மீளாய்வாண்டின் போது 05 பொது முயற்சிகளின் இலாப வருமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் அந்த முயற்சிகளின் ரூபா 6,041 மில்லியனான இலாப வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி காலப்பகுதியில் உச்சமாக காணப்பட்ட அரசின் மூலதன பிரச்சினைகள் காரணமாக மேற்படி நிறுவனங்களில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி மூலங்களிலிருந்து இலாப அனுப்பல்களை பெற்றுக் கொள்ளல் இடம்பெற்றது. | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்த மானதுமான வருமானக் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (iv) | 06 பொது முயற்சிகளினால் கடந்த 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இலாப வருமானங்கள் எவையும் பங்களிப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. | **அரச ஈட்டு, முதலீட்டு வங்கி** 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாசல் 111 (Basel 111) கண்காணிப்பு தேவைப்பாடுகளின் பிரகாரம் மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடு உரிய வங்கியினால் நிறைவு செய்யப்படும் வரையிலும் எதுவித பங்கிலாபத்தினையும் பிரசுரித்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. | பொது முயற்சிகளிலிருந்து இலாப வருமானத்தை சேகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
அதிகளவில் உருவாகியுள்ள செயற்படு மூலதன சிக்கல் நிலைமை காரணமாக இலாப அனுப்பல்களை மேற்கொள்ளல் இடம்பெறவில்லை.

**இலங்கை மின்சார சபை**
இலங்கை மின்சார சபையின் கிரயம் வெளிப்படுத்தும் விலை முறைமை அல்லாத காரணத்தால் தொடர்ச்சியாக நட்டமீட்டும் நிறுவனமொன்றாகும்.

அதற்கமைய 2021/12/31 ஆந் திகதியளவில் இலங்கை மின்சார சபையின் திறந்த நட்டம் ரூபா 189 மில்லியன் ஆகும்.

**பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகம் (Post Graduate Institute of Management)**
நிலவும் செயற்படு மூலதன சிக்கல்களை கருத்தில் கொண்டு இலாப அனுப்பல்களை மேற்கொள்ளல் இடம்பெறவில்லை.

**இலங்கை வானொலி கூட்டுத்தாபனம் / இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**
இந்த நிறுவனங்களின் சம்பளம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களை தீர்ப்பனவு செய்வதற்காக தொடர்ச்சியாக பொதுத் திறைசேரியின் நிதியேற்பாடு வழங்கப்படுவதுடன் நிலவும் செயற்படு மூலதன பிரச்சினைகள் காரணமாக இலாப அனுப்பல்கள் இடம்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (v) | 04 பொது முயற்சிகளின் இலாப வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த முயற்சிகளினால் மதிப்பிடப்பட்ட இலாப வருமானத்தை விட கூடுதலாக 84 சதவீதம் முதல் 471 சதவீதம் வரையான வீச்சில் இலாப வருமானம் பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் உச்சமாக காணப்பட்ட அரச மூலதன சிக்கல்கள் காரணமாக மேற்கூறிய நிறுவனங்களில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த காசு மூலங்களில் இலாப அனுப்பல்கள் மேற்கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமான துமான வருமானக் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(II)** | **வருமானக் குறியீடு 20.02.04.00 - பங்கிலாப வருமானம்** | | |
| (i) | 20:02:04:00 - பங்கிலாப வருமானக் குறியீட்டிற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 6,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 78 சதவீதம் அல்லது ரூபா 4,672 மில்லியனான வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பல்வேறு நிறுவனங்கள் குறைந்த இலாப நிலைமையை அறிக்கையிட்டிருந்ததுடன் பங்கிலாபத்தினை பெற்றுக் கொள்ளும் போது நிலவும் செயற்படு மூலதனத் தேவைப்பாடுகள் அதிகளவில் கருத்தில் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமான துமான வருமானக் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 11 பொது முயற்சிகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்ட பங்கிலாப வருமானத்தை விஞ்சி 40 சதவீதம் முதல் 566 சதவீதம் வரையான வீச்சில் பங்கிலாப வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது. | **நமுனுகுல பெருந்தோட்டக் கம்பனி மற்றும் எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி** இந்த இரு பெருந்தோட்டக் கம்பனிகளின் திறைசேரி பங்குரித்து 16 சதவீதம் மற்றும் 21 சதவீதம் எனும் குறைந்த பெறுமதியை கொண்டிருந்தமையால் பங்கிலாப வருமானத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. 2020 ஆம் ஆண்டிற்காக அந்த இரு நிறுவனங்களினால் முறையே ரூபா 32 மில்லியன் மற்றும் ரூபா 31 மில்லியன் வருடாந்த பங்கிலாபமாக | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமான துமான வருமானக் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**ஸ்ரீலங்கா டெலிகொம்**

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பங்கொன்றிற்கான உழைப்பு அதிகரித்ததன் அடிப்படையில் கம்பனியின் விலையிடப்பட்ட பங்குகளுக்காக பங்கிலாப அளவானது அதிகரித்துள்ளது. அதற்கமைய உள்ளபடியான பங்கிலாப வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சியுள்ளது.

**லங்கா லேய்டன் கம்பனி**

லங்கா லேய்டன் கம்பனியின் அரச பங்குடமை மிகவும் சிறிய அளவாக இருந்தமையால் பங்கிலாப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி வங்கி, லங்கா பொஸ்பேட் கம்பனி, மாந்தை சோல்ட் கம்பனி, இலங்கை உரக் கம்பனி, De La Rue lanka Pvt Ltd, Lanka Industrial Estates Ltd, Ceylon Agro Industries**

மேற்கூறிய நிறுவனங்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டிற்காக கூறப்பட்ட பங்கிலாபம் உயர்ந்த மட்டத்தில் நிலவியமையால் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட உள்ளபடியான வருமானம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | 7 பொது முயற்சிகளின் பங்கிலாப வருமானமாக மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட உள்ளபடியான பெறுவனவுகள் குறைவடைந்தமையால் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | **குருநாகலை பெருந்தோட்டக் கம்பனி மற்றும் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி**<br><br>2019 ஆம் ஆண்டிற்காக குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியால் வெளியிடப்பட்ட ரூபா 15 மில்லியனான பங்கிலாபம் 2021 ஆம் ஆண்டின் போது தாமதித்து வழங்கப்பட்டுள்ளதுடன் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியால் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 10 மில்லியன் படியாக வெளியிடப்பட்ட ரூபா 20 மில்லியனான பங்கிலாபம் 2021 ஆம் ஆண்டின் போது தாமதித்து வழங்கப்பட்டுள்ளது. | வருமானங்களை மதிப்பீடு செய்தல் காசு அடிப்படையில் இடம்பெறுகின்றமையால் நிதிப் பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி சரியான மற்றும் நடைமுறைக்கு சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (iv) | 2021 ஆம் ஆண்டிற்காக 04 பொது முயற்சிகளிலிருந்து ரூபா 670 மில்லியன் பங்கிலாப வருமானம் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பொது முயற்சிகளிலிருந்து எதுவித பங்கிலாப வருமானமும் வழங்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 07 பொது முயற்சிகளால் கடந்த சில வருடங்களில் பங்கிலாப வருமானத்திற்கு எதுவித பங்களிப்பும் வழங்கப்பட்டிருக்க வில்லை.<br>• லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி<br>• இலங்கை சேமிப்பு வங்கி (Sri Lanka | **இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி**<br>2020 ஆம் ஆண்டு வரையிலும் இந்தக் கம்பனி இலாப மீட்டும் கம்பனியொன்றாக காணப்பட்டமையால் அந்த ஆண்டுகளில் மதிப்பிடப்பட்ட அனுப்பல்கள் வழங்கப் பட்டுள்ளமையாலும் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 600 மில்லியனான பங்களிப்பு | பொது முயற்சிகளிலிருந்து பங்கிலாபத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

Savings Bank)

- சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு
- கஹட்டகல கிறபைட் லங்கா கம்பனி
- லங்கா சீனிக் கம்பனி
- லங்கா லொஜிஸ்டிக் கம்பனி
- லங்கா திரிபோசாக் கம்பனி

உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், நிறுவனம் நட்டமீட்டும் நிலைக்கு உள்ளாகியமையும் சுற்றுலா கைத்தொழில் மேம்படுத்தல் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் (பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் - கட்டம் II) அபிவிருத்தி செய்வதற்காக நிறுவனத்தின் பணம் ஈடுபடுத்த நேர்ந்த காரணத்தாலும் எதிர்பார்த்த அனுப்பல்களின் அளவினை வழங்குவதற்கு நிறுவனத்திற்கு இயலுமை காணப்படவில்லை.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலயமைப்பு நட்டமீட்டும் நிறுவனமொன்று என்பதால் 2019 ஆம் ஆண்டு முதல் பங்கிலாபத்தினை வழங்கியிருக்கவில்லை.

**இலங்கை சீனிக் கம்பனி**

2022.04.04 ஆந் திகதி இடம்பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் வரிக்கு பின்னரான இலாபம் அறிக்கையிடப்பட்டுள்ள மையால் பொதுத்திறைசேரிக்கு பங்கிலாபத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய வெளியிடப்பட்ட பங்கிலாப தொகை அதுவரையிலும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினை எடுக்காது செலுத்தப்படாத காரணத்தினால் இதுவரையிலும் குறித்த பங்கிலாபம் பொதுத்திறைசேரிக்கு வழங்கப்பட்டிராததுடன் திறைசேரியின் பிரதிநிதி ஊடாக அனுப்புவதற்கு துரித

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும்.<br><br>**இலங்கை காப்புறுதி கூட்டுத்தானம், Paranthan Chemicals Co. Ld.**<br>2021 ஆம் ஆண்டினுள் இந்த நிறுவனங்களில் நிலவிய செயற்படு மூலதனத் தேவைப்பாடு காரணமாக மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட குறைந்த பங்கிலாபமானது அனுப்பப்பட்டது.<br><br>Colombo Commercial Fertilizer Ltd, Lanka Triposha Limited, ரக்னா பாதுகாப்பு லங்கா கம்பனி, லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி (Sri Lanka Saving Bank), கஹகட்டகல கிறபைட் லங்கா கம்பனி, லங்கா லொஜிஸ்டிக் கம்பனி.<br><br>மேற்படி நிறுவனங்களில் நிலவிய செயற்படு மூலதன பிரச்சினைகள் மற்றும் அந்த நிறுவனங்களில் எதிர்பார்த்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மேலதிக பண மூலங்களை கருத்தில் கொண்டு கடந்த வருடத்தில் இலாபம் பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றிருக்கவில்லை. | |

**2.2 செலவின முகாமைத்துவம்**

------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீடுகளில் ரூபா 118,240,000 ஆன நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மற்றும் | குறைநிரப்பு மதிப்பீட்டு இலக்கம் 560 மூலம் அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனத்தின் ஆகஸ்ட் மாத | வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் |

| | | |
|---|---|---|
| வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியேற்பாடு குறித்துரைத்த விடயங்களுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 26,400,000 ஆன நிதியேற்பாடு அதற்கு முரணாக ஏனைய செலவின விடயங்களில் பணிகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. | சம்பளங்களை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடானது ரூபா 26.5 மில்லியன் எதுவித செலவினமும் மேற்கொள்ளப் படாமையால் லங்கா சதொச நிறுவனத்தினால் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டியிருந்த நீண்டகால கடனுக்காக அட்டுறு செலவினத்தை தீர்ப்பதற்காக குறித்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீடு செய்தல் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நிதியேற்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iii) குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் அளவினை விட மேலதிகமாக ரூபா 274,649 ஆன பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவ்வாறான தவறுதல்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஏற்படுத்தப் பட்டிருந்த அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் வங்கி நடைமுறைக் கணக்கிற்கு வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 18,493 கூட்டுப்பெறுமதியுடைய காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் உரிய பணிகள் மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ‘‘மக்களின் அபிலாஷைகளை பாதுகாத்தல்’’ எனும் பிரதான பணியின் கீழ் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் காணப்படும் நிறுவனங்களில் ஆண்டறிக்கைகள் உரிய திகதிகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் தொடர்பில் பரீட்சிக்கும் பணிப்பொறுப்பு சாட்டப்பட்டுள்ளது. திணைக்களத்தின் கீழ் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படும் 300 பொது முயற்சிகள் 119 பொது முயற்சிகள் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் தொடர்பான தகவல்கள் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 181 அரச முயற்சிகள் அல்லது கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்படும் மொத்த பொது முயற்சிகள் 60 சதவீதமானவற்றின் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்குரிய 11 பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழான பொதுத் திறைசேரியின் உரித்துடைய (பல்வேறு உரித்துடமை சதவீதங்களின் அடிப்படையில்) சுமார் 300 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றுக்கிடையே சிறிய பங்குரித்து நிலவும் நிறுவனங்கள் (Minority Shareholding), துணை கம்பனிகள் (Subsidiary Companies), இணைக் கம்பனிகள் (Associate Companies), பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் உள்ளடங்கலாக நிறுவனத்தினால் ஆண்டறிக்கைகள் நேரடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதில்லை. அதற்கமைய ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கம்பனிகளின் எண்ணிக்கை 130 ஆகும்.<br><br>2021 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட Guidelines on Corporate | திணைக்களத்தின் பிரதான பணியினை நிறைவேற்றுவது தொடர்பில் முறையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | governance for State owned Enterprises வழிகாட்டலின் பந்தி இலக்கம் 3.2 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டு கூட்டத்தில் (Annual Performance Review Meeting) ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதற்கமைய வருடம் நிறைவடைந்து 05 மாத காலப்பகுதியில் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கும் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கான நடைமுறையொன்று நிறுவப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் இந்த பிரச்சினைகளை திருத்துவதற்கு உரிய நடைமுறை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஆரம்பத்தில் இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மரக் கூட்டுத்தாபனம் ஆகிய 07 பொது முயற்சிகள் மற்றும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு, முதலீட்டு வங்கி, இலங்கை பிணையங்கள் பரிமாற்றல் ஆணைக்குழு மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை ஆகியவற்றுக்காக நியதிச் சட்ட நிறுவனங்களை | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2021 நவம்பர் 16 ஆந் திகதி வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேடு மற்றும் வழிகாட்டல் கோவையின் துணைக் கம்பனிகளை கண்காணித்தல் தொடர்பில் இந்த திணைக்களம் நேரடியாக தலையிடாது என்பதுடன் அந்த நிறுவனங்கள் நேரடியாக கண்காணிப்பதற்கும் அவற்றின் பொறுப்பு வரிசை அமைச்சின் வழிகாட்டல்களின் அடிப்படையில் தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபையிடம் காணப்படுகின்றது. | திணைக்களத்தை மீள நிறுவியமைக்கான நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிர்வகித்தல் தொடர்பில் சிறந்த நடைமுறையொன்று அமுல்படுத்துதல் மற்றும் அதன் பின்னர் அந்த நடைமுறையை ஏனைய நிறுவனங்களுக்கும் நடைமுறைப்படுத்தும் 2002 ஆம் ஆண்டின் போது பொது முயற்சிகள் திணைக்களம் மீள நிறுவப்பட்டது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கியின் கண்காணிப்புக் கோவைகளினுள் சேவை நிறைவு செய்த அமைய, ஒப்பந்த அல்லது பயிற்றுவிக்கப்படாத ஊழியர்களை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள், புதிய வங்கிக் கிளைகளை உருவாக்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள், புதிய ATM இயந்திரத்தை நிறுவுமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள், நுகர்வோரின் முறைப்பாடுகள் போன்ற விடயங்கள் உள்ளடங்கியிருந்தது. அவற்றின் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் பொது முயற்சிகள் தொடர்பில் போதிய தலையீடொன்று இடம்பெற்றிராததுடன் குறித்த கோரிக்கைகள் நிறுவனத்திற்கு அனுப்பப்படுதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. அது தொடர்பில் பின்தொடர்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கமைய திணைக்களத்தை மீள நெருங்கியமையின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

அரச வங்கிகள் ஏனைய தனியார் துறையின் வங்கி நிறுவனங்கள் உரிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு மற்றும் நேரடி மேற்பார்வையின் கீழ் காணப்படும். எனினும், அரச வங்கிகளின் உரித்தினைக் கொண்டுள்ள பொதுத்திறைசேரி வங்கிக்குரிய கட்டளைச் சட்டங்களின் மூலம் மேற்கொள்ள வேண்டிய அங்கீகாரங்களை வழங்குதல் மற்றும் உரிய ஏனைய பணிகளுக்கு அவசியமான தலையீட்டினை மேற்கொள்ளும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசாங்கத்திற்கு சொந்தமாகவுள்ள பூகொட டெக்ஸ்டைல் லங்கா லிமிட்டட் நிறுவனம் 2010 ஆம் ஆண்டின் போது மூடப்பட்டதுடன் அந்தக் கம்பனிக்கு சொந்தமாகக் காணப்பட்ட 223-227 இலக்க, பிரதான வீதி, கொழும்பு 11 எனும் இடத்தில் அமைந்துள்ள 14-95 பேர்ச் கட்டிடத்துடனான காணி பொதுத்திறைசேரிக்குரிய சொத்தொன்றாகக் காணப்பட்டது. பூகொட டெக்ஸ்டைல் கம்பனி மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தக் கட்டிடம் ரமோனா தனியார் கம்பனிக்கு 2 வருடங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்தக் குத்தகைக் காலம் நிறைவடைந்தவுடன் நிதி அமைச்சினால் இந்த கட்டிடத்தை குறித்த குத்தகையாளருக்கு குறுங்கால அடிப்படையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடம் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுவதுடன் அதை உடைத்து அகற்றி புதிய கட்டிடமொன்றினை நிர்மாணிக்கும் தேவைப்பாடு உள்ளதாகவும் அதற்காக ரூபா 120 மில்லியன் செலவிடப்பட வேண்டுமெனவும் குத்தகையாளரால் நிதியமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அரசின் தலைமை அளவையியலாளரின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆதனம் சுமார் 15 | காணிகள் ஆணையாளர் நாயகத்தினால் L2/SLO/COL/CoL/051 மற்றும் 2021.09.24 ஆந் திகதிய அவரின் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த ஆதனம், 15 வருட காலத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரத்தினை தயாரித்து அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப் பட்டுள்ளன. | அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்தொன்று ஏனைய தரப்பினரின் கீழ் பயன்படுத்தும் பணியை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டியதுடன் அதன் செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு பெற்றுக் கொள்ளக் கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் செயற்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | வருட காலமாக குத்தகை அடிப்படையில் ரமோனா (தனியார்) கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்றினை சமர்ப்பிப்பதற்கு தீர்மானம் எடுத்துள்ளமை குறித்த கோவையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த விடயம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தின் போதிய தலையீடு இடம்பெற்றிருக்கவில்லை. | | |
| (ஈ) | திணைக்களத்தின் பிரதான பணியாக பொது முயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் நிர்வாகம் உள்ளடங்கும். பொதுத் திறைசேரியினால் பெரும்பாலான அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் 19 பொது முயற்சிகளுக்கு உரியதாக வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் 105 வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் செயற்படுவதற்கு பொது முயற்சிகளை ஊக்குவிப்பது திறைசேரியின் பிரதிநிதியால் மேற்கொள்ள தவறியிருந்தது. | பொது முயற்சிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மூலம் நல்லாளுகையை மேம்படுத்தும் நோக்கில் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேடு மற்றும் வழிகாட்டல் கோவை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பொது முயற்சிகளின் செயலாற்றலினை கண்காணிக்கும் நோக்கில் அவர்களின் கூட்டிணைந்த திட்டங்கள், செயல் நடவடிக்கைத் திட்டங்களை திருத்தும் முன்மொழிவு பெற்றுக் கொள்ளலும், எமது திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் திறைசேரியின் பிரதிநிதிகளுக்காக பொது முயற்சிகளின் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் போது செயற்பட வேண்டிய விதம் | பொது முயற்சிகள் அரசின் சட்டங்கள், விதிகளுக்கு இணங்க செயற்படுதல் தொடர்பில் உரிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்பில் பயிற்சி செயலமர்வுகளின் மூலம் அவர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் கண்காணிப்புக்கு உள்ளாகும் 300 நிறுவனங்களிடையே 119 நிறுவனங்கள் பொது முயற்சிகளுக்கு சொந்தமான உப கம்பனிகளாவதுடன் இந்த உப கம்பனிகள் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்புக்கு உள்ளாவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2021 நவம்பர் 06 ஆந் திகதி வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேடு மற்றும் வழிகாட்டல் கோவையின் உப கம்பனிகளை கண்காணித்தல் தொடர்பில் இந்த திணைக்களம் நேரடியாக தலையிடாததுடன் அந்த நிறுவனங்களை நேரடியாக கண்காணித்தல் மற்றும் அவற்றின் பொறுப்புக்கள் வரிசை அமைச்சினதும் வழிகாட்டல்களின அடிப்படையில் தாய்க் கம்பனியின் கண்காணிப்புச் சபைக்கு உரித்தானதாகும். | சரியான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளை வழங்கி பொது முயற்சிகளின் செயலாற்றல் மட்டத்தினை உயர்த்த வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தில் நிலவிய 11 வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்திலான 06 வெற்றிடங்கள் நிலவின. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புமாறு நிதியமைச்சிற்கு அவ்வவ்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | திணைக்களத்தின் பணிப்பொறுப்பினை நிறைவேற்று வதற்குரிய பதவிகள் வெற்றிடமாக காணப்படின் அப்பதவிகளை நிரப்புதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்க |

வேண்டியமை
மற்றும்
அங்கீகரிக்கப்பட்ட
பதவியணியுள்
திணைக்களத்திற்கு
அநாவசியமான
பதவிகள்
காணப்படின்
அவற்றை திருத்திய
மைப்பதற்கு
நடவடிக்கை எடுக்க
வேண்டிமை.